# என்னைப் பெயர் சொல்லி அழைத்த தெய்வமே

என்னைப் பெயர் சொல்லி அழைத்த தெய்வமே
நான் உருவாகும் முன்பே
என்னை அறிந்திருந்த தெய்வமே
உள்ளங்கையில் பொறித்து வைத்து காத்த தெய்வமே
போற்றுகிறேன் புகழுகிறேன்
வாழ்த்துகிறேன் வணங்குகிறேன் - 2

(என்னைப் பெயர்..)

**1)**
புதிய வாழ்வொன்றை எனக்கு நீ தந்தாய்
புனித பாதையையும் எனக்குக் காட்டித்தந்தாய் - 2
புதிய வாழ்வினில் புனித பாதையில் - 2
புதிதாய் நான் செல்லும் புனித பயணத்தில்
புலரும் விண்மீனாய் விரைந்து நீ வா
புதிய மனிதனாய் எனை மாற்ற வா
போற்றுகிறேன் புகழுகிறேன்
வாழ்த்துகிறேன் வணங்குகிறேன் - 2

(என்னைப் பெயர் )

**2)**
இரவிலும் பகலிலும் இணைந்தே வாழ்கிறேன்
இன்ப துன்பத்தையும் இனிதே பகிர்கிறேன் - 2
இன்றைக்கு இருந்து நாளைக்கு அழியும் - 2
இந்த உலகத்தின் படைப்புக்கள் யாவையும்
இரக்க உணர்வுடன் காத்து வருகிறீர்;
இகமதில் உமைப் புகழ வாய்ப்பளிக்கிறீர்
போற்றுகிறேன் புகழுகிறேன்
வாழ்த்துகிறேன் வணங்குகிறேன் - 2

(என்னைப் பெயர் )